(2020) 1 S.C.R. 132

இந்திய உச்ச நீதிமன்றம்

2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 தேதி

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. எல். நாகேஷ்வர ராவ்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. ஹேமந்த் குப்தா

உரிமையியல் மேல்முறையீடு எண்.5673/2009

வரதராஜன் - மேல்முறையீட்டாளர்

-எதிர்-

கனகவள்ளி மற்றும் பலர் - எதிர்மேல்முறையீட்டாளர்

உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908 - கட்டளை XXII, விதி-5 மற்றும் பிரிவு.115 – மனைவி அவரது கணவரின் இறப்புக்கு பின்னர் வாரிசு என்ற அடிப்படையில் வழக்கு சொத்தில் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் - கணவருக்கு ஏற்கனவே திருமணமாகி ஒரு மகன் உள்ளார் - வழக்கு அனுமதிக்கப்பட்டது - நிறைவேற்றுகை மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள போது வாதி

இறந்துவிட்டார் - மேல்முறையீட்டாளர், வாதியின் தங்கை மகன் வாதி எழுதிக் கொடுத்த உயிலின் அடிப்படையில் சட்டப்படியான பிரதிநிதியாக நிறைவேற்றுகை மனு தாக்கல் செய்துள்ளார் - மனு அனுமதிக்கப்பட்டுள்ளது - நிறைவேற்று நீதிமன்றத்தில், மேல்முறையீட்டாளர் சட்டப்படியான பிரதிநிதி என்று முடிவு செய்து நிறைவேற்றுகை மனு தாக்கல் செய்ய உரிமையுள்ளது என்று முடிவு செய்யப்பட்டது - உயர்நீதிமன்றம் சீராய்வில் உயில் எழுதப்பட்ட சூழ்நிலையானது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது ஆகவே மேல்முறையீட்டாளர் நிறைவேற்றுகை மனு தாக்கல் செய்ய இயலாது என்று முடிவு செய்கின்றது - மேல்முறையீட்டில் உச்ச நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் உயிலின்படி இறந்தவரின் சொத்தின் உரிமை மீதான உரிமை கோரும் ஒரே சட்டப்படியான பிரதிநிதி - உயில் சாட்சிகள் மேல்முறையீட்டாளருக்கு சாதகமாக சாட்சியம் அளித்துள்ளனர் - வேறுயாரும் தீர்ப்பானண பெற்ற இறந்தவரின் சார்பாக சட்டப்படியான வாரிசு என்று நிறைவேற்றுகை மனு தாக்கல் செய்ய முன்வரவில்லை - எதிர் உரிமை கோரிக்கை இல்லாத சூழ்நிலையில் உயர்நீதிமன்றம், நிறைவேற்றுகை நீதிமன்றத்தின் உத்தரவை ரத்து செய்தது நீதிக்கு உகந்ததல்ல, கட்டளை XXII விதி 5-இன் கீழ் சட்டப்படியான பிரதிநிதிகளை தீர்மானிக்கும் விசாரணை சுருக்கமுறை விசாரணையாகும். கட்டளை XXII-இன் கீழான மனு நிலுவையிலுள்ள வழக்குகளுக்கு மட்டும் பொருந்தும் - நிறைவேற்றுகை மனுவில் சட்டப்படியான வாரிசுகளின் உரிமைகள் குறித்த முரண்பாடுகள் கட்டளை XXII விதி 5-இன் கொள்கைகளின் அடிப்படையில் தீர்வு காணலாம் - மேலும் தீர்பாணையை நிறைவேற்ற கோரும் நடவடிக்கையில் சட்டப்படியான பிரதிநிதிகளை தரப்பினராக சேர்ப்பது சம்மந்தமான – சீராய்வு பிரிவு. 115-இல் வகுத்துள்ள பரிசோதனைகளை பூர்த்தி செய்யாமல், நிறைவேற்றுகை நீதிமன்றதின் உத்தரவை இரத்து செய்துள்ளது - உயர்நீதிமன்றத்தின் சீராய்வு அதிகார வரம்பு - பொருண்மைகள் குறித்து மாறுப்பட்ட கருத்தியல் அடிப்படையில் நிறைவேற்றுகை நீதிமன்றத்தின் அதிகார வரம்பில் தலையிடமுடியாது - உயர்

நீதிமன்றத்தின் உத்தரவினை இரத்து செய்தும் - நிறைவேற்றுகை நீதிமன்றத்தின் உத்தரவை உறுதி செய்தும் உத்தரவிடப்படுகிறது.

உரிமையியல் நடைமுறைச் சட்டம் - 1908, பிரிவு. 115 – உயர்நீதிமன்றத்தின் சீராய்வு அதிகாரம் குறித்து பரிசீலித்து - மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு கீழ்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது :-

உயர்நீதிமன்றத்தின் உத்தரவு சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. மேல்முறையீட்டாளர், இறந்தவர் தீர்ப்பாணை பெற்ற பெண் எழுதிக்கொடுத்த உயிலின் அடிப்படையில் தன்னை சட்டப்படியான பிரதிநிதி என்று உரிமை கோருகிறார், அவர் உயிலில் கையொப்பமிட்ட சாட்சி, உயிலை எழுதியவரை சாட்சிகளாக முன்னிலைப்படுத்தினார். மேற்குறிப்பிட்ட சாட்சிகள் உயில் எழுதிய பெண்ணின் தங்கையின் மகன் என்றும், மேல்முறையீட்டாளருக்கு சார்பாக உயில் எழுதிக்கொடுத்துள்ளதாக சாட்சியமளித்துள்ளனர். இறந்தவர் பெற்ற தீர்ப்பாணை சார்பாக வேறுயாரும் தீர்ப்பாணை அடிப்படையில் உரிமைகோரி நிறைவேற்றுகை மனுவை தொடர்ந்து நடத்த முன்வரவில்லை. தீர்ப்பாணை பெற்றவர் நிறைவேற்றுகை மனு தாக்கல் செய்துள்ளார். அவர் இறந்த பின்னர் மேல்முறையீட்டாளர் நிறைவேற்றுகை மனுவை தொடர்ந்து நடத்த மனு தாக்கல் செய்துள்ளார். தீர்ப்பாணை பெற்ற இறந்தவரின் வாரிசு என்று எதிர் உரிமை கோரிக்கை இல்லாத சூழ்நிலையில் உயர்நீதிமன்றம் நிறைவேற்றுகை நீதிமன்றத்தின் உத்தரவை இரத்து செய்தது நீதிக்கு உகந்ததல்ல. கட்டளை. XXII விதி. 5-இன் கீழ் சட்டப்படியான பிரதிநிதிகளை தீர்மானிப்பதற்கான விசாரணை சுருக்க முறை தன்மையானது. கட்டளை. XXII நிலுவையில் உள்ள அசல் வழக்குகளுக்கு பொருந்த கூடியது. ஆனால் சட்டப்படியான பிரதிநிதிகள் குறித்த முரண்பாடுகளை நிறைவேற்று நடவடிக்கைகளை முடிவு செய்வதற்கு கட்டளை. XXII விதி. 5 இன் கொள்கைகளை பயன்படுத்தலாம் (பத்தி- 7,8).

V. உத்திராபதி - எதிர் - அஷ்ரப் மற்றும் பலர் (1998) 3 SCC 148: (1998) I SCR 937 ; தயாராம் மற்றும் பலர் - எதிர் - ஷியாம் சுந்தரி மற்றும் பலர் AIR 1965 SC 1049 : (1965) SCR 231 ; தஸ்ரத் ராவ் காட் - எதிர் - பிரிச் மோகன் ஸ்ரீவஸ்தவா (2010) 1 SCC 277 : (2009) 15 SCR 643 ; ஜலடி சுகுணா (இறந்துவிட்டார்) சர்பாக சட்ட பிரதிநிதிகள் - எதிர் - சத்திய சாய் சென்ட்ரல் டிரஸ்ட் மற்றும் பலர் (2008) 8 SCC 521 : (2008) 7 SCR 734 ; சுரேஷ் குமார் பன்சல் - எதிர் - கிருஷ்ணா பன்சல் மற்றும் ஒருவர் (2010) 2 SCC 162 : (2009) 16 SCR 419. கதிர் - எதிர் - முத்துகிருஷ்ண ஐயர் ILR 26 MAD 230 ; மொஹந்தர் கவுர் மற்றும் ஒருவர் - எதிர் - பியாரா சிங் மற்றும் பலர் AIR 1981 P&H 130.

1.2. மேல்முறையீட்டாளர் மட்டுமே உயிலின் அடிப்படையில் இறந்தவரின் சொத்தில் கீழ் உரிமை கோருகிறார். நிறைவேற்றுகை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர், இறந்தவரின் சட்டப்படியான பிரதிநிதி என்ற அடிப்படையில் தீர்ப்பாணையை நிறைவேற்ற தகுதிபடைத்தவர் என்று முடிவு செய்துள்ளது. மேற்படி பொருண்மைகளின் அடிப்படையில், மேல்முறையீட்டாளர் சட்டப்படியான பிரதிநிதி என்ற அடிப்படையில் தீர்ப்பாணையை நிறைவேற்ற தகுதியுடையவர் ஆவார். கூடுதலாக, நிறைவேற்றுகை மனுவில் சட்டப்படியான பிரதிநிதியை தரப்பினராக சேர்ப்பது பொதுவாக பயன்படுத்தும் நடைமுறையாகும். பிரிவு. 115-இல் வரையருக்கப்பட்ட பரிசோதனைகளை பொருத்து உளத்தீர்வு கொள்ளாமல் நிறைவேற்றுகை நீதிமன்றத்தின் உத்தரவை இரத்து செய்துள்ளது. உயர்நீதிமன்றம் தனது சீராய்வு அதிகாரத்தை பயன்படுத்தி நிறைவேற்றுகை நீதிமன்றத்தின் உத்தரவில் தலையிடுகின்றது. எப்போது கீழமை நீதிமன்றத்தின் உத்தரவில் தலையிட முடியும் என்றால் கீழமை நீதிமன்றங்கள் சட்டத்தை மீறி செயல்பட்டால் அல்லது தனது அதிகாரத்தை

பயன்படுத்த தவறினால், அதிகாரத்தை சட்டமுரணாக பயன்படுத்தினால் அல்லது சட்டமுறைகேட்டுடன் செயல்பட்டிருப்பதாக தோன்றினால் தலையிடலாம். ஒரு பொருண்மை குறித்து மாறுப்பட்ட கருத்து அடிப்படையில் நிறைவேற்றுகை நீதிமன்றத்தின் உத்தரவில் தலையிட முடியாது. அதன் விளைவாக உயர்நீதிமன்ற உத்தரவு இரத்து செய்யப்படுகிறது, நிறைவேற்றுகை நீதிமன்றத்தின் உத்தரவு உறுதி செய்யப்படுகிறது. (பத்தி- 14, 15).

மேற்கோளிடப்பட்ட தீர்ப்புக்கள்

(1998) 1 SCR 937	–	பத்தி 8
(1965) SCR 231	–	பத்தி 9
ILR 26 MAD. 230	–	பத்தி 9
AIR 1981 P&H 130	–	பத்தி 10
(2009) 15 SCR 643	–	பத்தி 11
(2008) 7 SCR 734	–	பத்தி 12
(2009) 16 SCR 419	-	பத்தி 13

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு : உரிமையியல் மேல்முறையீட்டு எண் : 5673 /2009.

சென்னை உயர்நீதிமன்ற சி.ஆர்.பி.எண் (NPD) 1859/2005 மனுவில் 27.11.2007-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுந்த மேல்முறையீடுகள்.

வழக்குரைஞர்கள் -

திரு. சி. பரமசிவம்

திரு. எ. எஸ். வைரவன்

திரு. ராகேஷ் கே சர்மா

திரு. ஹர்டிக் கௌதம் ..... மேல்முறையீட்டாளருக்காக

திரு. ரோகித் துத்தா

திரு. சுபாங்கி சங்கல்

திரு. சிரா ரஞ்ஜன் ஆடி ..... எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. ஹேமந்த் குப்தா

1. சென்னை உயர்நீதிமன்றத்தால், உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908 இன் பிரிவு. 115 இன் கீழ் சீராய்வு மனுவில், நவம்பர் 27, 2007 தேதியிட்டு வழங்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. செப்டம்பர் 19, 2005 அன்று நிறைவேற்றுகை நீதிமனறம் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக மேற்படி சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது, அதில் உமாதேவி என்பவருக்கு ஆதரவாக பிறப்பிக்கப்பட்ட ஒரு தீர்ப்பாணையின்படி வழக்குச் சொத்தின் உடைமையை உமாதேவியின் பிரதிநிதியாக தற்போதைய மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பூர்வமாக வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது.

3. உமாதேவி தனது கணவர் திரு. மாணிக்க நாயக்கர் என்பவரின் வாரிசாக பாக பிரிவினை கோரியும், தனி உடைமை கோரியும் வழக்கு தொடுத்தார். உமாதேவிக்கு முன்பாக மேற்படி மாணிக்க நாயக்கர் வள்ளியம்மாள் என்பவரை மணந்து முனுசாமி நாயக்கர் என்ற

மகன் இருந்தார். மாணிக்க நாயக்கர் 1971 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். உமாதேவி மாணிக்க நாயக்கருக்கு எதிராக வழக்கில், சொத்தில் பாதி பங்கு கோரி பாக பிரிவினை வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு ஏப்ரல் 7, 1989 அன்று தீர்ப்பாணை வழங்கப்பட்ட பின்பு இறுதி நிலையை அடைந்தது. 1999 ஆம் ஆண்டில் உமாதேவி மேற்படி தீர்ப்பாணையை நிறைவேற்றக் கோரியிருந்தார், ஆனால் அவர் ஜூலை 22, 1999 அன்று இறந்துவிட்டார். உமாதேவியின் இளைய சகோதரியின் மகனான மேல்முறையீட்டாளர், ஜூலை 16, 1999 தேதியிட்ட உயிலின் அடிப்படையில் மேற்படி உமாதேவியின் சட்டப் பிரதிநிதியாக மேற்படி தீர்ப்பாணையை நிறைவேற்ற ஒரு விண்ணப்பத்தை தாக்கல் செய்தார் (உயில் - சான்றாவணம் P.1). அந்த விண்ணப்பம் 2004 மார்ச் 29ம் தேதியன்று நிறைவேற்றுகை நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.

4. மேல்முறையீட்டாளர், எதிர்மனுதாரரை வெளியேற்றுவதற்கும், தாவா சொத்தின் காலியான உடைமைகளை வழங்குவதற்கும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை XXI விதி 35 இன் கீழ் ஒரு விண்ணப்பத்தை தாக்கல் செய்தார். அத்தகைய மனுவிற்கு பதிலளிக்கும் விதமாக, எதிர்மனுதாரர் உயில் போலியானது என்றும், இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956, பிரிவு. 15 இன் படி ஒரு சகோதரியின் மகன் சட்டப்பூர்வ வாரிசு இல்லை என்றும் வலியுறுத்தினார். நிறைவேற்றுகை நீதிமன்றம் மேற்படி விண்ணப்பத்தை செப்டம்பர் 19, 2005 அன்று முடிவெடுத்து தீர்ப்பளித்தது. உயில் சாட்சிகளில் PW-2 ஆயியப்பா என்பவரால் சான்றளிக்கப்பட்டதும் மற்றும் PW-3 மோகன் என்பவரால் எழுதப்பட்டதும் கண்டறியப்பட்டது. எதிர்மனுதாரர் செந்தில்நாதன் RW-1 ஆகவும், கிருஷ்ணன் RW-2 ஆகவும் சாட்சியம் கொடுத்திருந்தனர். இறந்த உமாதேவியின் சட்டப் பிரதிநிதியாக மேல்முறையீடு செய்பவருக்கு தீர்ப்பாணையை நிறைவேற்ற உரிமை உண்டு என்று நிறைவேற்றுகை நீதிமன்றம் தீர்ப்பளித்தது. நிறைவேற்றுகை நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தது :

"11..... மேலும் OS. எண்.30/1982 இல் 07.04.1989 அன்று உமாதேவிக்கு ஆதரவாக ஒரு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையும் வழங்கப்பட்டது. இறந்த முனுசாமியோ அல்லது அவரது மகன் செந்தில்நாதனோ இந்த தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை. ஆனால், உமாதேவி தான் இறப்பதற்கு முன் தானே கையொப்பமிட்டு மேற்படி நிறைவேற்றுகை மனுவை தாக்கல் செய்திருந்தார். மேலும், மேற்படி உமாதேவி, தான் இறப்பதற்கு முன், அதாவது இறப்பதற்கு 6 நாட்களுக்கு முன்பு, Ex.P-1 உயிலை நிறைவேற்றியுள்ளார். நிறைவேற்றுகை மனு மற்றும் உயிலை தாக்கல் செய்வதில் அவர் செய்த செயல்கள், எதிர்மனுதாரர்களாலும் சரி என ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இந்த நீதிமன்றம் கண்டறிந்துள்ளது. மேலும் இந்த நீதிமன்றம் உமாதேவியின் கணவரின் முதல் மனைவியின் மகனான மேற்படி முனுசாமி உமாதேவிக்கு உணவு, துணிமணிகள், தங்கும் வசதிகள் ஏதும் கொடுக்காமலும் சரிவர கவனிக்காமலும் இருந்த காரணத்தினால் மேற்படி இறந்துபோன உமாதேவி தனது இளைய தங்கையின் வீட்டிற்கு சென்று இளைய தங்கையோடு வாழ்ந்து வந்து அவரது உடல்நிலை சரியில்லாமல் போன காரணத்தினால் மேற்படி உயிலை தனது இளைய தங்கையின் மகனான வரதராஜனுக்கு எழுதி வைத்த சங்கதிகள் உண்மையென தெரிய வருகிறது.

5. மேற்படி உத்தரவினை எதிர்த்து உரிமையியல் நடைமுறைச் சட்டம். பிரிவு. 115 இன் கீழ் தீர்ப்புக் கடனாளியால் சீராய்வு மனு தாக்கல் செய்தார். உமாதேவியின் சட்டப் பிரதிநிதியாக மேற்படி தீர்ப்பாணையை நிறைவேற்றுவதைத் தொடர மேல்முறையீட்டாளரைத் தவிர வேறுயாரும் முன்வரவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

6. உயிலின் செல்லும் தன்மையை குறித்து மற்றும் உயிலின் கீழ் உள்ள சட்டப்பூர்வ பிரதிநிதியை சட்டப் பிரதிநிதியாகக் கருதி, தீர்ப்பாணையை நிறைவேற்றக் கோருவது குறித்தும், முடிவெடுக்க நிறைவேற்றுகை நீதிமன்றமே தகுதியான மற்றும்

முறையான நீதிமன்றம் என்று உயர் நீதிமன்றம் கூறியுள்ளது. இருப்பினும், உயிலை நிறைவேற்றியதில் சந்தேகத்திற்குரிய சூழ்நிலைகளால் சூழப்பட்டதாகவும் உயர் நீதிமன்றம் கண்டறிந்தது. உயிலை நிறைவேற்றுவது தொடர்பாக நிறைவேற்றுகை நீதிமன்றம் சாட்சியங்களைக் கொண்டு பதிவு செய்த உண்மையின் கண்டுபிடிப்புகளை சீராய்வு அதிகார வரம்பில் உள்ள உயர் நீதிமன்றம் தலையிட்டதைக் கவனிக்கலாம். மேல்முறையீட்டாளரின் கூற்றுப்படி, தீர்ப்பாணை பெற்றவரான உமாதேவியை அவரது மூத்தார் மகன் முனிசாமி நாயக்கர் தனது வீட்டை விட்டு வெளியேற்றி, கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாக தனது சகோதரியுடன் தங்கியிருந்தார், ஆனால் கடைசி நேரத்தில் உயிலை நிறைவேற்றுவது சந்தேகத்திற்குரியது என்று உயர் நீதிமன்றம் கண்டறிந்தது. உயர் நீதிமன்றம் கீழ்கண்டவாறு கூறியுள்ளது :

> “19. ஆதாரங்களின் மூலம் நிறுவப்பட்ட மேற்கூறிய அனைத்து உண்மைகளையும் கருத்தில் கொண்டு, சந்தேகத்திற்குரிய சூழ்நிலைகளை அகற்றுவதற்காக குற்றச்சாட்டுகளை எவர்மீது வைக்கின்றோமோ அவரே அதனை நீக்க வேண்டும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும், உயில் நிரூபிக்கப்பட்டது என்ற முடிவுக்கு வரும்போது, கீழமை நீதிமன்றம் திருப்திகரமான காரணங்களைக் கூறவில்லை. திருப்திகரமான சான்றுகள் இல்லாததால், உயில் எழுதிவிட்டு இறந்து போன பெண் மூலம் தான் நிறைவேற்றப்பட்டதா என்பதை என்னால் உறுதிப்படுத்த முடியவில்லை. எனவே, உயிலை நிறைவேற்றுவது நிரூபிக்கப்படவில்லை என்றும் அது உண்மையானது அல்ல என்று கருதப்பட்டால், அதன் விளைவு உயிலின் கீழ் உள்ள சட்டப்படியானவர் உயில் எழுதியவரின் சட்ட பிரதிநிதியாக கருத இயலாது என்றும் நிறைவேற்றுகை மனுவை தீர்பாணை பெற்றவர் சார்பாக பதிவில் சேர்த்துக் கொண்டு நிறைவேற்றுகை மனுவை தொடர இயலாது.

7. உயர் நீதிமன்றத்தின் உத்தரவு சட்டப்படடி நிலைக்கத்தக்கதல்ல என்று தீர்மானிக்கின்றது. உமாதேவி நிறைவேற்றிய உயிலின் அடிப்படையில், மேல்முறையீடு செய்பவர், உமாதேவியின் சட்டப் பிரதிநிதி என்று கோரியுள்ளார். அவர் ஒரு சான்றளிக்கும் சாட்சியையும், உயிலினை எழுதியவரையும் ஆஜர்படுத்தியுள்ளார். உமாதேவி தனது சகோதரியின் மகனான மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாக உயிலை நிறைவேற்றியதை சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளனர். தீர்ப்பாணை பெற்றவரின் சட்டப் பிரதிநிதியாக வேறுயாரும் தீர்ப்பாணையை நிறைவேற்ற முன்வரவில்லை. உமாதேவி தான் நிறைவேற்றுகை மனுவை தாக்கல் செய்துள்ளார், ஆனால் அவர் இறந்த பிறகு, மேல்முறையீட்டாளர் நிறைவேற்றுகை மனுவை தொடர விண்ணப்பம் செய்துள்ளார் தீர்ப்பாணையை பெற்றவரின் சட்டப்பூர்வ பிரதிநிதி என்று உரிமை கோரும் எந்தவொரு போட்டியாளரும் இல்லாத நிலையில், உயர் நீதிமன்றம், சட்டப்பூர்வ வாரிசு யார் என்பதைத் தீர்மானிக்கும் அதிகார வரம்பு, உ.ந.ச. கட்டளை XXII விதி 5 – ன் படி, நிறைவேற்றுகை நீதிமன்றத்தின் உத்தரவை இரத்து செய்ததில் நியாயமில்லை ஏனெனில் வாரிசு குறித்து தீர்மானிப்பது சுருக்க முறையில் தீர்வு செய்வதாகும்.

8. உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை XXII நிலுவையில் உள்ள வழக்கிற்கு பொருந்தும் என்று நாங்கள் கூறலாம். ஆனால் சட்டப் பிரதிநிதிகளின் இடையே உள்ள முரண்பட்ட கூற்றுக்களை உரிமையியல் நடைமுறைச் சட்டம், கட்டளை XXII விதி 5 இன் கீழ் நிலைவேற்றுதல் நடவடிக்கைகளில் முடிவு செய்யப்படலாம். இந்த நீதிமன்றம், V. உத்திராபதி - எதிர் - அஷ்ரப் மற்றும் பலர் (1998) 3 SCC 148 என அறிவிக்கப்பட்ட ஒரு தீர்ப்பில், ஒரு வழக்கில் எழும் சாதாரணக் கோட்பாடு - ஆணையை நிறைவேற்றும் முன் - ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சட்டப் பிரதிநிதிகளை வழக்கில் சேர்க்க வேண்டும் என்னும் விதி நிறைவேற்றும் நடவடிக்கைகளில் இறந்த தீர்ப்பாணை பெற்றவர் அல்லது தீர்ப்பு

கடனாளியின் சட்டப் பிரதிநிதிளை வழக்கில் சேர்ப்பதற்கு பொருந்தாது. இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு கூறிகிறது:-

" 11. உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 22 விதி 12 பின்வருமாறு கூறுகிறது:

" கட்டளை 22 விதி 12: நடவடிக்கைகளுக்கான உத்தரவை செயல்படுத்துதல் - விதிகள் 3, 4 மற்றும் 8 இல் உள்ள எதுவும் ஒரு தீர்ப்பாணை அல்லது உத்தரவை நிறைவேற்றும் நடவடிக்கைகளுக்குப் பொருந்தாது."

12. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒரு வழக்கில் எழும் இயல்பான கொள்கை - தீர்ப்பாணை நிறைவேற்றப்படுவதற்கு முன் - ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சட்டப் பிரதிநிதிகள் வழக்கில் சேர்க்கப்பட வேண்டும், இல்லையெனில், வழக்கற்றுப் போகும் - ஆனால் இந்த விதி நிறைவேற்றுதல் நடவடிக்கைகளில் தீர்ப்பாணை பெற்றவரோ அல்லது தீர்ப்பு-கடனாளி மரணம் அடைந்தால் சட்ட பிரதிநிதியை வழக்கில் சேர்ப்பதற்கு பொருந்தாது.

13. வெங்கடாசலம் செட்டி - எதிர் - ராமசாமி சேர்வை [ILR (1932) 55 Mad 352 : AIR 1932 Mad 73 (FB)] சென்னை உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வு வழங்கிய தீர்ப்பில், வழக்கு அற்றுப் போதல் என்ற விதியானது நிறைவேற்றுகை மனு நடைவடிக்கைகளுக்கு பொருந்தாது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. முல்லாவின் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கருத்து [(தொகுதி 3) பக்கம் 2085 (15th Edn., 1997)] உயர் நீதிமன்றங்களின் எண்ணிலடங்கா தீர்ப்புகளைக் குறிப்பில் எடுத்துக் கொண்டு கீழ்கண்டவாறு கூறியுள்ளது :

"விதி. 12 ஒரு விதிவிலக்காக அமைகிறது. இது ஒரு நிறைவேற்றுகை மனு நடவடிக்கைகளில் ஒரு தரப்பினர் மனு நிலுவையில் இருக்கும்போது

இறந்துவிட்டால், வழக்கு அற்றுப்போகும் என்ற விதி பொருந்தாது. எனவே, தீர்ப்பாணை பெற்றவரின் நலனுக்காக, அவரது வாரிசுகள் விதி. 2 இன் கீழ் வாரிசுகளை தரப்பினராக சேர்க்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசியமில்லை, ஆனால் நடவடிக்கை நிலுவையில் இருக்கும் போது உடனடியாக அல்லது எந்த நேரத்திலும், வாரிசுகளை தரப்பினராக சேர்க்க நடவடிக்கை எடுக்கலாம் அல்லது அவர்கள் ஒரு புதிய நிறைவேற்றுகை மனு தாக்கல் செய்யலாம்."

(வலியுறுத்தி வழங்கப்பட்டது)

14. எங்கள் கருத்துப்படி, உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் முல்லாவின் வர்ணனையில் உள்ள மேற்கண்ட சட்ட அறிக்கை நிறைவேற்றுதல் நடவடிக்கைகளில் தரப்பினரால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறை மற்றும் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் தொடர்பான சட்ட நிலைப்பாட்டை சரியாகப் பிரதிபலிக்கிறது,

9. சட்ட பிரதிநிதிகளை அசல் வழக்கு விசாரணையில் தான் சேர்ப்பது அவசியமென்று இந்த நீதிமன்றத்தால் நடத்தப்பட்ட வழக்கான தயா ராம் மற்றும் பலர் -எதிர் - ஷியாம் சுந்தரி மற்றும் பலர் (AIR 1965 SC 1049) குறிப்பிட்டுள்ளது. மேலும் சேர்க்கப்பட்ட சட்ட பிரதிநிதிகள் இறந்தவரின் எஸ்டேட்டைப் போதுமான அளவு பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும், வழக்கின் முடிவானது சேர்க்கப்பட்டவர்களை மட்டுமல்ல, சேர்க்கப்படாதவர்களைக் குறித்தும் இறந்தவரின் முழு எஸ்டேட்டையும் கட்டுபடுத்தும். கதிர் - எதிர் - முத்துகிருஷ்ண ஐயர் (ILR 26 MAD. 230) வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை இந்த நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது.

10. பஞ்சாப் & ஹரியானா உயர்நீதிமன்றத்தின் முழு அமர்வு அதன் ஒரு தீர்ப்பான மொஹிந்தர் கவுர் & ஒருவர் - எதிர் - பியாராசிங் மற்றும் பலர்-இல் (AIR 1981 P&H 130) ஆராயப்பட்ட கேள்வியானது ஒரு வழக்கில் உரிமையியல் நடைமுறைச் சட்டம், கட்டளை XXII விதி. 5 இன் கீழ் எடுக்கப்பட்ட முடிவானது அதே நபர்கள் அல்லது அதே தரப்பினர்கள் தங்களுக்குள் தாக்கல் செய்துக் கொள்ளும் பிந்திய வழக்கு தாவாவை முன் தீர்ப்பு தடை பாதிக்குமா AIR 1965 SC 1049, ILR 26 MAD, AIR 1981 P&H 130. நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு கூறியது.

> " 5. மேலே கவனிக்கப்பட்ட திரு. பிந்த்ராவின் முதல் வாதத்தைப் பொறுத்த வரையில், லாகூர் உயர் நீதிமன்றம் தீர்ப்பு மற்றும் இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பகளுக்கு கூடுதலாக பிற உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புகள் மற்றும் பல்வேறு காரணங்களுக்காக மீண்டும் மீண்டும் தீர்மானிக்கப்பட்ட தீர்ப்புகள் வாயிலாக தெரிந்துக் கொள்வது என்னவெனில், கட்டளை 22, விதி 5, உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட முடிவு, அதே தரப்பினர் அல்லது நபர்களுக்கு இடையேயான பிந்திய வழக்குகளில் தீர்வுற்றதாக செயல்படாது என்றும் மேலும் முந்தைய வழக்கு நடவடிக்கைகளில் இறந்த தரப்பினரின் வாரிசு அல்லது வாரிசு பற்றிய கேள்வி நேரடியாக எழுப்பப்பட்டிருந்தாலும், சில காரணங்கள் பின்வருமாறு:-
>
> (i) அத்தகைய முடிவு வழக்கிலேயே எழும் முதன்மையான நோக்கத்துடன் இல்லாமல், முதன்மையான நோக்கத்துடன் தொடர்புடைய துணை நோக்கமாக இருந்து அது குறித்து முடிவு செய்யப்பட வேண்டும். இந்த முடிவு வழக்கின் எந்த பிரச்சினையையும் தீர்மானிக்க வழிவகுக்காது.

(ii) வழக்கை ஒழுங்காக நடத்துவதற்காக மட்டுமே சட்டப் பிரதிநிதி நியமிக்கப்படுகிறார். அத்தகைய முடிவு, எல்லா விஷயங்களிலும் இறந்தவரின் சரியான வாரிசுக்கான உரிமைகளை எல்லா நேரங்களிலும் பறிக்க முடியாது.

(iii) இந்த முடிவு மேல்முறையீடு எதுவும் வழங்கப்படாத ஒரு சுருக்கு விசாரணையின் முடிவு.

(iv) இறந்த தரப்பினரின் சட்டப் பிரதிநிதி மற்றும் வாரிசு பற்றிய கருத்துக்கள் முற்றிலும் வேறுபட்டவை. சட்டப்பூர்வ பிரதிநிதியாக ஒருவரை அமைப்பதற்கு, அவர் எஸ்டேட்டில் நன்மை பயக்கும் ஆர்வம் கொண்டிருக்க வேண்டும் என்பது தேவையற்றது. செயல்படுத்துபவர்கள் மற்றும் நிர்வாகிகள் சட்டப் பிரதிநிதிகள் ஆவர், அவர்களுக்கு எந்த நன்மையும் இல்லை என்றாலும் இறந்தவரின் சொத்துக்குள் அத்துமீறி நுழைபவர், இறந்தவரிடமிருந்து சுயாதீனமாக உரிமை கோருபவர் சட்டப்பூர்வ பிரதிநிதியாக இருக்கமாட்டார். மறுபுறம் சட்டபடியாகவோ அல்லது வேறு விதமாகவே, பயன் அடையக் கூடியவர்கள் தரப்பினர்களை ஆளும் வாரிசுகள் சட்டப் பிரதிநிதிகளாக இருப்பார்கள்.

9. எனவே சாராம்சம் யாதெனில், உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 22, விதி. 5, இன் கீழ் ஒரு முடிவு, வழக்கின் இறுதித் தீர்ப்பில் தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்கில், வழக்கினை ஒழுங்காக நடத்துவதற்கு மட்டுமே பதிலளிக்க வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். இறந்த தரப்பினர்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் நபர்கள், வாரிசுரிமைப் பிரச்சினையை வேறு வழக்கு மூலம் தீர்த்துக் கொள்கிறார்கள், அத்தகைய முடிவு அது தொடர்பான வழக்குக்கு முற்றுப்புள்ளி வைக்காது. வழக்கின் சர்ச்சையில் உள்ள எந்த விஷயத்தையும் இது தீர்மானிக்கவில்லை. இது தவிர, அத்தகைய நடவடிக்கையானது, மேல்முறையீடு எதுவும் வழங்கப்படாத முடிவுக்கு எதிராக மிகவும் சுருக்குமான இயல்புடையது

என்பது வெளிப்படையானது. இறந்த தரப்பினரின் சட்டப்பூர்வ பிரதிநிதி என்ற கூற்றுக்கு ஆதரவாக சில வகையான ஆதாரங்களை வழிநடத்த ஒரு வாய்ப்பை வழங்குவது எந்த வகையிலும் நடவடிக்கைகளின் தன்மையை மாற்றாது. உடனடி வழக்கில், இந்த வழக்கின் விசாரணைக்குப் பிறகு விசாரணை நீதிமன்றத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை ஏற்றுக்கெள்ளப்பட்ட உத்தரவின் சுருக்கமானது, நடைமுறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மிகவும் சுருக்கமாக கருதப்பட்டன என்பதை தெளிவாக சுட்டிக்காட்டுகிறது. இயற்கை, இறந்த தரப்பினரின் வாரிசு அல்லது வாரிசுரிமை பற்றிய கேள்வியை தீர்மானிப்பதில் எந்த இறுதி முடிவையும் வழங்காத பார்வையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் தொடர்கிறது என்பது தெளிவாகிறது.

11. மொஹிந்தர் கவுரின் தீர்ப்பு தஷ்ரத் ராவ் கேட் - எதிர் - பிரிச் மோகன் ஸ்ரீவஸ்தவா (2010) 1 SCC 277 என்ற தீர்ப்பில் இந்த நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. இந்த வழக்கில், உயர் நீதிமன்றம், கட்டளை XXII விதி 5 இன் கீழான விசாரணை சுருக்கமான இயல்புடையது என்பதால், விசாரணையில் மேல்முறையீட்டாளரை சட்டப்படியான பிரதிநிதியாக வழக்கில் சேர்க்க முடியுமா என்பது குறித்து மட்டுமே உறுதி செய்யப்படுகிறது. இந்த வழக்கில் கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்படுகின்றது.

"21. ஒரு சட்டப்பூர்வ நிலைப்பாடு யாதெனில், பொதுவாக, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 22 விதி 5 இன் கீழ் நடைபெறும் விசாரணை சுருக்கமான இயல்புடையது மற்றும் முடிவு காண்பது முன் தீர்ப்பு தடையாக இருக்க முடியாது, இருப்பினும், அந்த சட்ட நிலைப்பாடு அந்த தரப்பினரைப் பொறுத்தவரையில் மட்டுமே உண்மையாக இருக்கும், எவர் ஒருவர் உயில் வழி பயனாளருக்கு எதிராக ஒரு போட்டி உரிமைகோருகின்றாரோ, உதாரணமாக, இரண்டு நபர்கள் உள்ளன அவர்களில் ஒருவர் ரமேஷ் மற்றவர் அருண் கேட் ஆவார். இருவரும் சீராய்வு மனுவில் சுகியாபாய் என்பவரின் சட்டப்படியான

பிரதிநிதிகளாக இணைகின்றனர். கடந்த 09-09-1997 தேதியிட்ட விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் உள்ள உயிலின் மீதான கண்டுபிடிப்பு, அவர்களுக்கு எதிராகவோ அல்லது வேறு எவருக்கும் எதிராகவோ, சொத்துக்கு போட்டியாக அல்லது மேல்முறையீட்டாளருக்கு எதிராக உரிமை கோருவது என்பது இறுதியானது அல்ல. எனவே, அந்த அளவிற்கு உயர் நீதிமன்றத்தின் கணிப்பு சரியானவை, இருப்பினும், உயில் தொடர்பான கேள்வி விரிவான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது, உயிலை பொருத்து மேல்முறையீட்டாளர் சாட்சியத்தால் உயிலின் சாட்சி கையொப்பமிட்ட சாட்சிகள் முழுமையாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். எதிர்மனுதாரர் தன்னையும் விசாரணைக்கு உட்படுத்திக் கொண்டு, உயில் ஒரு தவறான ஆவணம் என்று நிரூபிக்க முயன்று, அந்த ஆவணம் தவறானது என்று நிரூபிப்பதில் அவர் முற்றிலும் தோல்வியடைந்தார், குறிப்பாக மேல்முறையீடு செய்தவர் மற்றும் அவரது சான்றளிக்கும் சாட்சியால் ஆவணம் முழுமையாக நிரூபிக்கப்பட்டதால், பிரதான வழக்கில் சாட்சி மீண்டும் அந்த ஆதாரத்தை வழிநடத்துவார் என்று எதிர்பார்ப்பது வீண்.

25. டாக்டர் கைலாஷ் சந்த், எதிர்மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், விஜயலட்சுமி ஜெயராம் -எதிர்- எம்.ஆர்.பரசுராம் தீர்ப்பை [AIR 1995 AP 351] சார்ந்து தனது வாதத்தினை சமர்பித்தார் ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றத்தால் சரியாக கட்டளை 22 விதி 5 என்பது வழக்கினை தொடர்ந்து நடத்துவதற்காகவே சட்டப்பூர்வ பிரதிநிதிகளை வழக்கின் கோப்பில் கொண்டு வரும் நோக்கத்திற்காக மட்டுமே தவிர அது முன் தீர்ப்பு தடையாக செயல்படாது என்று தீர்ப்பளித்தது. மேலும் சட்டப் பிரதிநிதிகளுக்கிடையேயான போட்டி மற்றும் தகராறு போன்றவை சுயாதீனமாக விசாரிக்கப்பட்டு வேறொரு தனிப்பட்ட நடவடிக்கைளில் முடிவு செய்து கொள்ளுதல் வேண்டும் என்ற சட்ட

நிலைப்பாட்டை வலியுறுத்தியது. இங்கே சட்டப் பிரதிநிதிகளுக்கிடையில் அல்லது மேல்முறையீட்டாளர் / வாதிக்கு எதிராக எந்தவொரு போட்டி உரிமையும் கோரவில்லை, எவருக்கும் இடையே எந்தவிதமான போட்டியும் இல்லை. எனவே மேல்முறையீட்டாளர் / வாதி, அதே வழக்கில் மீண்டும் உயிலை நிரூபிப்பதில் எந்தவொரு கேள்வியும் எழவில்லை.

26. மேலும் சமர்பிக்கப்பட்ட மொஹிந்தர் கவுர் -எதிர்- பியாரா சிங் [AIR 1931 P&H 130] பஞ்சாப் ஹரியான உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வு தீர்ப்பில். அதே கருத்து மீண்டும் வலியுறுத்தப்பட்டது. நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, வெளிப்படுத்தப்பட்ட பார்வையில் தவறு கண்டுபிடிப்பதில் எந்த கேள்வியும் இல்லை, எவ்வாறாயினும், இந்த வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில், மேல்முறையீட்டாளர் / வாதி உயிலின் (சான்றாவணம் P.1) அடிப்படையில் உரிமையாளர் என்று கோரும்பொழுது சாட்சியங்களை மீண்டும் சமர்பிப்பது போன்று அமைவதால் மேற்படி கேள்வி எழாது.

12. மற்றொரு தீர்ப்பில், ஜலதி சுகுணா (இறந்தவர்) சார்பாக வாரிசுதாரராக - எதிர் - சத்ய சாய் மத்திய அறக்கட்டளை மற்றும் பலர். (2008) 8 SCC 521., வழக்கில் இந்த நீதிமன்றம், உ.ந.ச. கட்டளை XXII விதி 5 இன் கீழ் சட்டப்படியான பிரதிநிதிகளை சேர்ப்பதின் நோக்கம் இறந்தவரின் உரிமை சார்ந்த பிரதிநிதித்துவம் மற்றும் வழக்கு விசாரணைக்கு மட்டுமே என்று இந்த நீதிமன்றம் கீழ்கண்டவாறு தீர்மானித்தது யாதெனில்.

“15. சட்டப்பூர்வ பிரதிநிதிகளை பதிவு செய்ய விண்ணப்பத்தை தாக்கல் செய்வது, சட்டப் பிரதிநிதிகளை சேர்த்ததாக கருத இயலாது, ஒரு சட்டப்பூர்வ வாரிசுகள் விண்ணப்பம் தாக்கல் செய்யப்படும்போது, நீதிமன்றம் அதை பரிசீலித்து, அதில் குற்றிப்பிட்டுள்ள நபர்கள் சட்டப் பிரதிநிதிகளாக இறந்தவரின் எஸ்டேட்டைப் பிரதிநித்துவப்படுத்த சேர்க்க வேண்டுமா என்பதை முடிவு செய்ய

வேண்டும், நீதிமன்றம் அத்தகைய முடிவு செய்யும் வரை, சட்டப் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் நபர்கள் இறந்தவரின் எஸ்டேட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தவோ அல்லது வழக்கைத் தொடரவோ அல்லது வாதிடவோ உரிமை இல்லை. சட்டப் பிரதிநிதி யார் என்பதில் சர்ச்சை இருந்தால், அத்தகைய சர்ச்சையில் ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டும், சட்டப் பிரதிநிதியின் கேள்வி நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு, அத்தகைய சட்டப் பிரதிநிதி வழக்கில் சேர்க்கப்பட்டால் மட்டுமே, இறந்தவரின் சொத்து பிரதிநித்துவம் செய்யப்படுகிறது என்று கூறலாம், கட்டளை 22 விதி 5 இன் கீழ் யார் சட்டப் பிரதிநிதி என்பதை தீர்மானிப்பது, அந்த வழக்கின் தீர்ப்பிற்காக இறந்தவரின் எஸ்டேட்டின் பிரதிநித்துவத்தின் வரையறுக்கப்பட்ட நோக்கத்திற்காகவே இருக்கும், அத்தகைய உறுதியானது சட்டப் பிரதிநிதியாக இருக்கும் நபருக்கு, வழக்கின் பொருளான சொத்துக்கான இறந்தவரின் எஸ்டேட்டின் மற்ற போட்டி உரிமைதாரர்களுக்கு எதிராக எந்த உரிமையும் வழங்காது."

(வலியுறுத்தி வழங்கப்பட்டது)

13. மற்றொரு தீர்ப்பில் சுரேஷ் குமார் பன்சால் -எதிர்- கிருஷ்ணா பன்சால் மற்றும் ஒருவர், இந்த நீதிமன்றம் கீழ்கண்டவாறு தீர்மானித்தது யாதெனில்,

"20. உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 22 விதி 5 இன் கீழ் இறந்த வாதி அல்லது பிரதிவாதியின் சட்டப் பிரதிநிதி யார் என்ற கேள்வியை நிர்ணயிப்பது, சட்டப் பிரதிநிதிகளை தரப்பினர்களாக சேர்க்கும் நோக்கத்திற்காக மட்டுமே என்பது இப்போது நன்கு தீர்க்கப்பட்டுள்ளது. சட்டப்பூர்வ நடவடிக்கைகளுக்கு மட்டுமே தவிர முன் தீர்ப்பு தடையாக செயல்படாது மற்றும் சட்டப் பிரதிநிதிகளுக்கிடையேயான தகராறு சுயாதீனமாக விசாரிக்கப்பட்டு,

விருப்புறுதி மெய்ப்பிதழ் நடவடிக்கைகளில் முடிவு செய்யப்பட வேண்டும். வெளியேற்றுதல் வழக்கு அல்லது பிற தொடர்புடைய வழக்குகளின் முடிவுக்காக இதைத் தொடர அனுமதித்தால் வழக்குகள் தாமதமாகும், அதன் மூலம் வாடகைக்கு உள்ளவரே பயன்பெறுவார்.

14. மேற்கண்ட தீர்ப்பின் அடிப்படையில் நாம் தெரிந்து கொள்வது யாதெனில் மேல்முறையீடுபவர் ஒருவர் மட்டுமே இறந்த நபரின் சட்டபடியான வாரிசாக உயிலின் அடிப்படைய உரிமை கோருபவர் ஆவார். ஆகவே நிறைவேற்றுகை நீதிமன்றம் மேல்முறையீட்டாளரை இறந்தவர் சார்பாக தீர்ப்பாணையை நிறைவேற்ற தகுதியான நபராக கருதுகின்றது. ஆகவே மேற்கொண்ட பொருண்மைகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் சட்டப்பூர்வமான பிரதிநிதி என்பதால் தீர்ப்பிணை நிறைவேற்ற உரிமை உள்ளது என்று முடிவு செய்யப்படுகின்றது.

15. தீர்பாணையை நிறைவேற்ற சட்டப் பிரதிநிதியை சேர்ப்பதற்கான நடவடிக்கைளின் தன்மைக்கு கூடுதலாக, உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 115 இல் குறிப்பிடப்பட்டுள்ள சீராய்வு மனுவிற்கு உண்டான எந்தவித சோதனைகளையும் உயர் நீதிமன்றத்தால் திருப்திபடுத்தபடவில்லை என்பதைக் காண்கிறோம், நிறைவேற்றுகை நீதிமன்ற தீர்ப்பை சீராய்வு அதிகார வரம்பைப் பயன்படுத்தி உயர் நீதிமன்றம் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றமாக செயல்படுவது போல், நிறைவேற்றுகை நீதிமன்றம் வழங்கிய உத்தரவில் தலையிட்டுள்ளது. ஒரு கீழ்நிலை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, சட்டத்தால் அதனிடம் இல்லாத அதிகார வரம்பைச் செலுத்தியிருப்பதாக அல்லது அதனிடமுள்ள அதிகார வரம்பைச் செலுத்தத் தவறியிருப்பதாக அல்லது அதன் அதிகார வரம்பைச் செலுத்துகையில் சட்ட விரோதமாக அல்லது சட்ட முறைகேட்டுடன் செயல்பட்டிருப்பதாக தோன்றினால் உயர்நீதிமன்றம் அந்த வழக்கில் தான் தக்கதெனக்கருதும் கட்டளையைப் பிறப்பிக்கலாம், உயர்நீதிமன்றம் மாறுபட்ட பார்வையைக் கொண்டிருப்பதால் நிறைவேற்றுகை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில்

தலையிடுவதற்கான அதிகார வரம்பு உயர்நீதிமன்றத்திற்கு கிடையாது. இதன் விளைவாக, உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு இரத்து செய்யப்பட்டு, நிறைவேற்றுகை நீதிமன்றத்தின் உத்தரவு உறுதி செய்யப்படுகின்றது. மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "